**O.S.No.123/2010**

**Date:05.02.2019**

**வாதி தரப்பு சாட்சி 3 – முத்தம்மாள், க-பெ. கருப்பணன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சொல்வதற்கு என்னை இந்நீதிமன்றத்திற்கு அழைத்தது யார் என்றால் 1ம் வாதி அழைத்தார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனது வீட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் உள்ளது. ஆதார் அட்டை எனக்கு உள்ளதா என்றால் உள்ளது. என் கணவர் கருப்பணன் எப்பொழுது இறந்தார் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஆனால் அவர் இறந்து விட்டார். எனது மச்சான் அய்யனார் எப்பொழுது இறந்தார் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. தாவாச் சொத்திற்கான பட்டா மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து பழனிக்குமாருக்கு ஒதுக்கப்பட்டது என்று பட்டா உள்ள விபரம் தெரியுமடா எ்ன்றால் தெரியாது. எந்த வருடம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. கொட்டம் எங்கு உள்ளது என்றால் தென்வடலில் உள்ளது. அது சம்பந்தமாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வட்டாட்சியரிடம் மனு கொடுத்து பழனிக்குமார் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த சொத்து பொன்னுப்பாண்டியின் அப்பா பெயர் என்ன என்றால் பாண்டி ஆகும். தாவாச் சொத்து பொன்னுப்பாண்டியின் அப்பத்தா சொத்து என்றும், தற்போது பழனிக்குமாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி மீனாட்சி என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா எ்னறால் இல்லை. பழனிக்குமாரின் வீட்டு எண் தெரியுமா என்றால் தெரியாது. பழனிக்குமார் அழைத்ததின் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி உயர்நீதிமன்றத்தை அணுகி அதனடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது.

**3, முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவாச் சொத்து நஞ்சை நிலமா புஞ்சை நிலமா என்ற விபரம் தெரியுமா என்றால் வீட்டடி மனை ஆகும். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. யுடிஆர் காலத்தில் பட்டா எண் 574 பழனிக்குமார் பெயரில் இருந்தது என்றும், வட்டாட்சியரின் உத்தரவுப்படி 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் மேல்முறையீடு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பழனிக்குமார் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பழனிக்குமாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.